[2011 பிப்ரவரி 8

23—

பேருந்து வசதி

*57316—திரு. ச. லட்சுமணன்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போடிநாயக்கனூரிலிருந்து நாகர்கோவில் வழியாக கன்னியாகுமரிக்கு புதிய வழித் தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரை லிமிடெட் மூலமாக ஒரு பேருந்தும், திருநெல்வேலி லிமிடெட் மூலமாக ஒரு பேருந்தும், மொத்தம் 2 பேருந்துகள் போடிநாயக்கனூரிலிருந்து மார்த்தாண்டத்திற்கு நாகர்கோவில் வழியாக தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. நாகர்கோவிலிலிருந்து கன்னியாகுமரிக்கு 20 கிலோ மீட்டர் இடையில் இயக்கப்படும் குறுகிய தூரப் பேருந்துகள் வசதியைப் பயணிகள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. லட்சுமணன்.

திரு. ச. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடிநாயக்கனூரில் இருந்து மார்த்தாண்டத்திற்கு ஏற்கெனவே 2 பேருந்துகள் சென்று வருகிறதென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்வதுடன், அந்தப் பேருந்துத் தடத்தை கன்னியாகுமரி வரை நீட்டித்துக் கொடுத்தால் போடிநாயக்கனூர் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் அங்கே சென்று வருவதற்கு ஏதுவாக இருக்கும். அதேபோல, போடிநாயக்கனூர் அருகிலே மலைப் பகுதியில் வசிக்கக்கூடிய மக்களுடைய பூர்வீகம் இராஜபாளையம், சங்கரன்கோவில், திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி

2011 பிப்ரவரி 8]

ஆகிய பகுதிகளாகும். கன்னியாகுமரிக்குப் புதிய பேருந்து வழித் தடம் அமைத்துக் கொடுத்தால் அந்தப் பகுதி மக்கள் சென்று வருவதற்கு ஏதுவாக இருக்குமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே பணிவுடன் தெரிவித்துக்கொண்டு, அந்தப் புதிய வழித் தடத்தை அமைத்துத் தருமாறு கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே போடி-தேனி 170 நடைகளும், தேனி-நாகர்கோவில் 9 பேருந்துகள் 18 நடைகளும், நாகர்கோவில்-கன்னியாகுமரி 358 நடைகளும் இயக்கப்படுகின்றன. எனவே, இந்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தங்கள் பகுதியிலே புதிய வழித் தடங்களை உருவாக்க வேண்டுமென்று நிறைய வழித் தடங்களைத் தந்திருக்கிறார்கள். அவற்றை எவ்வளவு விரைவாக ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவாக ஏற்படுத்த இந்த அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால், இந்தப் புதிய பேருந்துகள் வாங்குகின்றபோது, கூண்டு கட்டுகின்ற பணியை விரைவாக நடத்த முடியவில்லை. காரணம், வெளி மாநிலங்களிலிருந்து வரும் அதிகமான பேருந்துகளுக்குக் கூண்டு கட்டுகின்ற பணி நடைபெறுகின்ற காரணத்தால் நம்முடைய மாநிலத்திற்குத் தருகின்ற அந்தப் பணி கொஞ்சம் தாமதமாக இருக்கிறது. அதுதான் தாமதத்திற்குக் காரணம். எனவே, புதிய வண்டி வருகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, போடிநாயக்கனூரில் இருந்து நேரடியாகவே கன்னியாகுமரிக்கு ஒரு பேருந்து இயக்க இந்த அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. லட்சுமணன்.*

திரு. ச. லட்சுமணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.*

[2011 பிப்ரவரி 8

முற்பகல் 10-00

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்மருவத்தூரில் அமைந்திருக்கக்கூடிய ஆதிபராசக்தி கோயில், அதைப்போல கேரளாவில் அமைந்திருக்கக்கூடிய ஐயப்பன் கோயில் ஆகிய இந்த இரு தலங்களுக்கும், தருமபுரி மாவட்டத்திலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள், பருவ, சிறப்புப் பூஜை காலக்கட்டத்திலே செல்கிறார்கள். ஆனால், போதுமான பேருந்து வசதிகள் இல்லாத காரணத்தினாலே, தனியார் பேருந்துகளுக்கு அதிக கட்டணங்கள் கொடுத்து, அந்த ஏழையெளிய பக்தர்கள் செல்லவேண்டிய ஒரு கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். தருமபுரி மாவட்டத்திலே பார்த்தீர்களேயானால்—தருமபுரிலிருந்து மாதேஸ்வரன்மலை—கர்நாடகத்தில் மாதேஸ்வரன் மலையில் இருக்கக்கூடிய பஸ்வேஸ்வரன் கோயிலுக்குச் சிறப்புக் காலங்களில் இரண்டு மணி நேரம், மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை அரசுப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதைப்போலவே நமது மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோயிலுக்கும், கேரளாவில் அமைந்திருக்கக்கூடிய ஐயப்பன கோயிலுக்கும் பக்தர்களுடைய நலன் கருதி அரசுப் பேருந்து இயக்க நமது அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்திலிருந்து தினந்தோறும் ஆதிபராசக்தி கோயிலுக்கு எங்களுடைய கணக்குப்படி, 100 பேருந்துகளிலிருந்து 150 பேருந்துகள் வந்துகொண்டிருக்கின்றன. நம்முடைய விழுப்புரம் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாகவே, canvass செய்து, எந்தெந்தப் பயணிகள் வருகிறார்களோ, அவர்களை ஏற்றி வருவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். எனவே, தனியார் பேருந்துகளில் சென்று அதிக கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை. நீங்கள் அந்தக் கோயிலுக்குச் செல்லவேண்டுமென்று மேலாண்மை இயக்குநரிடமோ அல்லது அங்கிருக்கின்ற கிளை மேலாளரிடமோ சொன்னாலே, சிறப்பு வழிபாடு என்ற காரணத்தால், அரசுப் பேருந்தை குறைந்த கட்டணத்தில் விடுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். தினந்தோறும் அந்தப் பேருந்துகளை இயக்கினால், வருமான அடிப்படையிலே பார்த்தால் கொஞ்சம் நட்டம் வரும்

2011 பிப்ரவரி 8]

என்ற காரணத்தினால்தான் தினந்தோறும் இயக்குவதில்லை. நீங்கள் தேவை என்று சொன்னால், அதைப் பற்றி அரசு ஆலோசித்து, ஆய்வு செய்து, வருமானம் சரியாக இருக்கும் என்று கருதினால், பேருந்து விடப்படும். சிறப்பாக நீங்கள் வேண்டுமென்று கேட்டால் தனியாகவே, spare bus உங்களுக்குத் தரப்படும். (குறுக்கீடு) அதைத்தான் நான் உங்களுக்குச் சொல்கிறேன். சேலம் போக்குவரத்துக் கழகமாக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும் சரி, அந்தக் கோயிலுக்குச் செல்லவேண்டுமென்று கேட்கின்றபோது நீங்கள் தனியாரிடம் சென்று அதிகமான கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. நேரடியாக நம்முடைய கிளை மேலாளரிடம் சொன்னாலே உங்களுக்கு spare bus—நிறைய, 1,800 spare bus-கள் வைத்திருக்கிறோம்—தேவையை அடிப்படையாகக்கொண்டு கேட்கின்றபோது அது உங்களுக்கு வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஆ. அங்கையற்கண்ணி.

செல்வி ஆ. அங்கையற்கண்ணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், சங்கராபுரத்திற்குப் புதிய பேருந்துப் பணிமனையை வழங்கினார்கள். இருபது பேருந்து வழித் தடங்கள் சுமார் நாற்பது கிராமங்களுக்குச் சென்று வருவதற்கு, அங்குள்ள மக்கள் பயனடையும் வகையில் விரைவில் ஏற்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த வழித் தடம் என்று எழுதித் தருவார்களேயானால், அதைப்பற்றி ஆய்வு செய்து, பிறகு அதைப் பரிசீலித்து, அந்தப் பகுதி மக்களுக்கு அது பயன்படும் என்று சொன்னால், இந்த அரசு நிச்சயமாக அதைச் செய்யும். காரணம், இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் மட்டும், கிட்டத்தட்ட 2,000 புதிய வழித் தடங்களை உருவாக்கியிருக்கிறோம்; 4,000 வழித் தடங்களை நீட்டிப்பு செய்திருக்கிறோம். இவ்வளவு செய்தும், இன்னும் அதிகமான அளவிற்குப் பேருந்துகள்—நேற்றுகூட

பத்திரிகையில் சொல்லியிருந்தார்கள்; இன்னும் அடர்வு அதிகமாக இருக்கிறது; அதிகமாகப் பேருந்துகள்—வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அப்படி வருகின்றபோது, ஒவ்வோர் ஆண்டும் புதிய வழித் தடங்கள் என்ற வகையிலே, ஆயிரம் வழித் தடங்களுக்கு மேலாக உருவாக்கிக்கொண்டுதான் இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதையும் எங்கள் துறை கருத்தில் கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. அருள் அன்பரசு.

திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் தொகுதியில் ஒரு போக்குவரத்துப் பணிமனை அமைக்க வேண்டுமென்று கடந்த 2006-ஆம் ஆண்டு சட்டமன்றக் கூட்டத் தொடரின், முதலிலேயே வலியுறுத்தினேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட 2010 டிசம்பர் மாதத்திற்குள் கண்டிப்பாக அடிக்கல் நாட்டுவதற்கு ஏற்பாடு செய்வேன் என்ற உத்தரவாதத்தை, இந்தச் சட்டமன்றத்திலே அளித்தார்கள். ஏற்கெனவே 10 ஏக்கர் நிலம் அங்கே கையகப்படுத்தப்பட்டு தயார் நிலையிலே இருந்தது. ஆனால், அங்கே வருவாய்த் துறை பட்டா வழங்க முடியாது என்று சொல்லிய காரணத்தால், வேறு மாற்று இடம் கொடுக்கப்பட்டது. அந்த இடமும் இப்போது பரிசீலனையில் உள்ளது. தயவுசெய்து மதிப்பிற்குரிய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், இந்த நேரத்திலே—ஏற்கெனவே சோளிங்கரில் அருள்மிகு யோக நரசிம்மர் ஆலயத்திற்கு ரோப் கார் அமைக்கும் பணி வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நம்முடைய வரலாற்றுச் சிறப்புமிக்க முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய உத்தரவால், சிறப்பாக அந்தத் தொகுதியிலே வளர்ச்சித் திட்டப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்த நேரத்திலே—அங்கே பக்தர்கள் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது; அதனால், உடனடியாக அங்கே ஒரு போக்குவரத்துப் பணிமனையைப் பொதுமக்களின் நலன் கருதி அமைத்துக் கொடுக்குமாறு, மிகச் சிறப்பாகப் பணியாற்றி வரும் நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் இந்த நேரத்திலே மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன். கடந்த டிசம்பரிலே அடிக்கல் நாட்டப்படும் என்று நீங்கள் வாக்குறுதி அளித்தீர்கள். தயவுசெய்து போக்குவரத்துத் துறை

2011 பிப்ரவரி 8]

அமைச்சர் அவர்கள் வருவாய்த் துறையிடம் கலந்தாலோசித்து உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையில்தான் நம்முடைய வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்த் துறைச் செயலாளருக்கு எழுதிய கடிதத்தை என்னிடம் தந்து, இதுபோன்ற நிலம்* No Objection Certificate-*க்காக வந்திருக்கிறது என்று சொன்னார். நான் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் வந்தவுடன் சொல்லி, விரைவில் அந்த இடத்தைப் பெறுவதற்கான முயற்சி எடுப்போம் என்று சொன்னேன். வருவாய்த் துறை அமைச்சரும் இருக்கின்றார். எனவே, விரைவில் அந்த நிலத்தைப் பெற்று மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுக்கிறோம். இன்னும் 15 நாட்கள்தான். அதற்குள் இதுமுடியுமா என்றால்,* Election Code of Conduct *வந்துவிட்டால் அதைச் செய்ய முடியாது. எனவே, அதற்குள் முடிப்பதற்கு முயற்சி எடுக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.*

திரு. போ. சின்னப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளத்திலிருந்து, சங்கரலிங்கபுரம், ஸ்ரீரங்கபுரம், சின்னையாபுரம் வழியாக பூதப்புரம் வரை ஒரு புதிய பேருந்து—அந்த வழியிலே இதுவரை எந்தப் பேருந்தும் இயக்கப்படவில்லை; ஆகையால் அந்த வழியாக ஒரு பேருந்து—இயக்கப்படுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நான்கரை ஆண்டுகளில் மாண்புமிகு உறுப்பினருடைய பகுதியில் மட்டும் கிட்டத்தட்ட பத்துக்கும்*

மேற்பட்ட வழித் தடங்களிலே, புதிய வழித் தடங்களிலே பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. இதையும் அவர் எழுதித் தருவாரேயானால் ஆய்வு செய்து அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அதிகமான பேருந்துகளைக் கொடுத்திருந்தாலும், முதல் கூட்டத் தொடரிலேயே 25 பேருந்துகள் தருவதாகச் சொன்னார்கள். இதுவரையில் 15 பேருந்துகள் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் 10 பேருந்துகளைக் கொடுத்தால், பேருந்தே வராத கிராமங்களுக்கு கலைஞர் ஆட்சியில் பேருந்து விட்டதற்கான பெருமை நமக்கு வந்து சேரும். அதோடு National Highway-இல் இருக்கின்ற பேருந்து நிறுத்தங்களில் பேருந்துகள் அதிகமாக நிற்பதில்லை. மக்களுக்கு இது பெரும் துயரமாக இருக்கிறது. மூன்றடைப்பு, பாணாங்குளம் போன்ற ஏரியாக்களில் இதுபோன்ற நிலைமை இருக்கிறது. அதையும் நமது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சீர்செய்து தரவேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. சுரேஷ் ராஜன் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, இன்னும் 4, 5 நாட்களில், கன்னியாகுமரி மாவட்டத்தில், 150 புதிய பேருந்துகள் விட இருக்கிறோம். அப்படி வருகின்றபோது உறுப்பினர் சொல்கின்ற பகுதியில் இன்னும் எஞ்சி இருக்கின்ற பேருந்துகளை விட முடியுமானால் அவற்றை விடுவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கும்.

தேசிய நெடுஞ்சாலையில் செல்கின்ற பேருந்துகள், மதுரையிலிருந்து அல்லது திருநெல்வேலியிலிருந்து, கன்னியாகுமரி செல்கின்றபோது, இடையிலே நிறுத்தி நிறுத்திச் சென்றோமானால் நேரடியாகச் செல்கின்ற பயணிகள், நம்முடைய அரசுப் பேருந்தை ஏற்பதில்லை. அவர்கள் தனியார் பேருந்துகளுக்குச் சென்றுவிடுகிறார்கள். எனவேதான், நேரடியாகப் பேருந்துகள்

2011 பிப்ரவரி 8]

செல்வதைப்போல 1, 2, 3 என்ற நிலையிலே 3 இடங்களிலே மட்டும் நிறுத்திச் சென்றுகொண்டிருக்கிறார்கள். இடையில் இருக்கின்ற ஊர்களுக்குப் பேருந்துகள் விடவேண்டும் என்பதற்காக, நகரப் பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. எனவே, அதையும் நீங்கள் குறித்துக் கொடுத்தீர்கள் என்றால், அந்தப் பகுதியிலே நகரப் பேருந்தை இயக்குவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

24—

கலைஞர் காப்பீட்டுத் திட்டம்

***118500—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் வேலூரில் உள்ள சி.எம்.சி. மருத்துவமனையைச் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டத்தில் உள்ள சி.எம்.சி. மருத்துவமனை, உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான முதல்வர் கலைஞரின் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், 8-3-2010 முதல் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளின் பட்டியலில் ஏற்கெனவே சேர்க்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில், இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக அறுவை சிகிச்சை போன்ற சிகிச்சைகள் செய்யவேண்டுமென்று சொன்னால், தலைசிறந்த